ஓம்

# கணபதி கடாட்சம்

தொகுப்பு நூல்



*18 ஆவது வெளியீடு.*

பாலர் ஞானோதய சபை,

காசி விநயகர் தேவஸ்தானம்

தெல்லிப்பழை,

*07 — 02 — 1992.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# கணபதி கடாட்சம்

தொகுப்பு நூல்

அமைப்பு

**சிவஸ்ரீ சிவகடாட்ச - கணேசலிங்கக் குருக்கள் அவர்கள்**
(தெல்லிப்பழை பாலர் ஞானோதயசபை தலைவர்)

18 ஆவது வெளியீடு

**காசி விநாயகர் தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

பிரசோற்பத்தி ஹூ தை மீ 24உ 07 — 02 — 1992.

விலை, 40 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முகவுரை

சென்ற பத்து ஆண்டுகளுக்கு மேலாக நாம் சைவச்சிறார்களின் நலன் கருதிச் சமய நூல்கள் பலவற்றை வெளியிட்டு வருகின்றோம். நம் சபையின் செயற்பாட்டுத் திறன் மிக்க செயலாளர் ந. சிவபாலகணேசன் அவர்கள் இவ்வாண்டு தேவஸ்தானத்தின் சகல விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு நூல் வெளிவர வேண்டுமென விரும்பினார். அன்னாரது விருப்பிற்கமைய தேவஸ்தானத்தில் நிகழும் நிகழ்வுகள் யாவையும் ஒரு தொகுதியாக்கிக் "கணபதி கடாட்சம்" என்னும் இந்நூலை வெளியிடுகின்றோம். மேலும் இந்நூலில் விநாயகருக்குரிய விநாயக கவசம் முதலாய பாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

காசிவிநாயகப் பெருமான் ஓர் அருள்மூர்த்தம், அவர் சாந்த சொரூபியாகவும் அடியார்களின் விக்கினங்களைத் தீர்ப்பவராகவும் இவ்வாலயத்தில் விளங்குகின்றார். இக்கிராமமக்கள் தமக்குத் துன்பங்கள் வந்த போதெல்லாம் நேர்த்திகள் செய்து அப்பெருமானின் அருளைப் பெறுகின்றார்கள். நூற்றாண்டு காலமாக தமது அருட்பிரவாகத்தை வீசிக்கொண்டிருக்கும் காசி ஐங்கரனின் பெருமைகளை அளவிட்டுக் கூறமுடியாது. கால நிலையைக் கருத்திற் கொண்டு இச்சிறு நூலை வெளியிடுகின்றோம்.

நமது ஆலயத்துடன் இருபது ஆண்டு காலமாகத் தொடர்பு பூண்டவர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் அவர்கள். அன்னார் ஆசியுரை நல்குவது மிக மிகப் பொருத்தமாகும். ஆலயத்துடனும் ஞானோதய சபையுடனும் ஐம்பது ஆண்டு காலமாக அளப்பரிய பணிகள் புரிந்து வருபவர் சைவப் பெரியார் இந்துசாதன ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் அவர்கள். அப்பெருமகன் இந்நூலுக்கு அணிந்துரை அளித்து அணிகலன் செய்துள்ளார்கள்.

கண்ணை இமை காப்பது போலப் பாலர் சபையைக் காத்து வருபவர்கள் சைவச் சீலர்களாகிய நிர்வாகிகள். இவர்களிலே திருவாளர்கள் ம. சி. சிதம்பரப்பிள்ளை, ந. செல்வநாயகம், திருமதி கலாதேவி பொன்னம்பலம் ஆகியோரின் பங்கு பணி அளவிடற்கரியது. பல நூல்களை யெல்லாம் வெளியீடு செய்த சைவப்பிரகாச அச்சகத்தினருக்கும் அதன் இன்றைய முகாமையாளராக இருந்து நமது நூலுக்காக அளப்பரிய சேவை நல்கிய திரு. சி. சர்வேஸ்வரன் அவர்கட்கும், நமது உளம் கனிந்த பாராட்டுக்கள். மேலும் இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் கணபதி கடாட்சம் கிட்டும் என்பதில் ஐயம் இல்லை.

சி. கணேசலிங்கக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பேரறிஞரும், இந்து சாதன ஆசிரியரும்,
பாலர் சபையின் பழம் பெரும் போஷகருமாகிய,

**நம. சிவப்பிரகாசம் (சட்டத்தரணி)**

அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

## காசி விநாயகர் கோயிற் கவினைப் பேசிடல் இன்பம்

கால அளவையிற் சிறிதாகவிருப்பினும் சைவ சீலம் திகழ்த்தும் கோலத்திற் காசிவிநாயகர் ஆலயம் சாலவும் வளம் பெற்று மாண்புற்ற வண்ணம் ஒளி வீசுகின்றதென்பதை விளக்கும் வெளியீடு நன்கமைந்திருக்கின்றது.

கோயில் நிகழ்ச்சிகளுக்குரியன யாவற்றையும் ஒன்று சேர அமைத்துக் கைந்நூலாக வெளியிடுவது வேண்டப்படுகின்றதென்பதை உணர்ந்த சிவஸ்ரீ சிவ. கணேசலிங்கக் குருக்கள் அவர்கள் இத்தொகுப்பை பத்திசிரத்தையுடன் வகுத்திருக்கின்றனர். திருவெம்பாவை ஔவையார் அகவல் இன்னளவும் இணையிற் பொருத்தமாகும்.

காசிவிநாயகர் தேவஸ்தானம் நிறைந்த சிந்தனையுடன் நெறிப் படுத்திக் கொண்டே நித்திய நியமமாக ஓங்குவது பெரும் மகிழ்ச்சிக் குரிய பணி என்க.

நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வேதாகம ஞான பாஸ்கரன் "

## சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் அவர்கள்

( அதிபர், தர்மசாஸ்தா குருகுலம் )

அளித்த

# ஆசியுரை

விநாயகொ விக்னஹந்தார। விநாயகர் விக்கினங்களை நீக்கு பவர். "சுபதாயக" சுகத்தை அளிப்பவர், என்றெல்லாம் ஆகமங் களில் விதந்து கூறப்பட்டிருக்கிறார். அவர் தெல்லிமா நகரிலே வீணாக்கடவைப் பதியிலே காசிவிநாயகராக கருணை மழை பொழிந்து திருவருள் பாலித்து வருகின்றார்.

மேஹோத்ர சாத்திய ஆகம விதிக்கமையக் கூறப்பட்ட வசந்தோற்சவம் பக்த முக்தி பாவனோற்சவம், தைலாப்பியங்கோற் சவம், மிருகயாத்திரை முதலியவை இந்த ஆலயத்திலே விசேட மாக நடைபெற்று வருகின்றன. பூஜா பலனைத் தந்தருளும் சண்டேசுரருக்கும் கூட "சண்டயாகம்" அனுஷ்டிக்கப்படுதல் இன்னொரு சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தில் ஓத வேண்டிய திருமுறைகள், திருப்பொற்சுண்ணம், திருவூஞ்சல், உற்சவகால நவசந்தியில் ஓதவேண்டிய பண்கள் எல்லாம் புத்தகரூபமாகத் தொகுத்து வெளியிடப்படுகின்றது. இவ்வாலயத்துக்குத் தேவை யானவற்றையெல்லாம் இந்நூல் பூர்த்தி செய்கின்றது.

கும்பாபிஷேகம் செய்யப்பட்ட நாளிலிருந்து இந்த ஆலயத் துடன் நெருங்கிய தொடர்பு அடியேனுக்கு உண்டு. விநாயகரது திருவருளினாலே எமக்கும் எல்லாச் சிறப்புக்களும் கிடைத்திருக் கின்றன. பத்தொன்பது ஆண்டு காலமாக நிகழ்ந்து வரும் மகோற்சவத்திலே ஒரே சிவாச்சாரியார் பதினாறு ஆண்டு காலம் தொடர்ந்து சிவாச்சாரியராக விளங்குவது அபூர்வமான அம்ச மாகும்.

இக்கிராம மக்கள் இந்நூலை வரவேற்றுப் படித்து காசி விநாயகரின் அருளைப் பெற்றுச் சிறப்பாக வாழ்வார்களாக.

இணுவில்
4 - 10 - 91

தா. மகாதேவக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காசி விநாயகர் தேவஸ்தானத்தின்
முகப்புத் தோற்றம்



மூன்றுவது கும்பாபிஷேகத்தின்போது
பிரதான கும்பம் வீதிப்பிரதட்சணம் வருகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# கருணையே வடிவானவர்

# காசி விநாயகர்

யாழ் நகரின் வடபால் அமைந்த தெல்லிமா நகரிலே வீணாக் கடவைப் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவர் தான் காசி விநாயகர். இற்றைக்கு ஒன்றரை நூற்றாண்டு காலத்திற்கு முன்னரே இவ்வாலயம் உருவாக்கப்பட்டதாக மூதாதையர் மூலம் அறியமுடிகின்றது. ஆன்மகோடிகளுக்கு முத்தி நல்கும் தலமாகிய காசிப்பதியிலிருந்து ஓர் இலிங்கம் (சிற்பியால் செதுக்கப்படாதது) கொண்டு வரப்பட்டதாகவும் வீணாக்கடவைப் பதியில் நின்ற விருட்சம் ஒன்றின் கீழ் வைத்து வழிபாடு செய்ததாகவும், இக்காரணத்தினாலேயே காசி விநாயகர் என்ற பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது.

விருட்சத்தின் கீழ் இருக்கும் போது மேற்குத் திசையை நோக்கியபடியே இருந்ததால் (பின்னர்) கோவில் அமைக்கும் போது மேற்கு வாசலைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் நடந்த கும்பாபிஷேகத்தின் காலப்பகுதி அறிய முடியவில்லை. இரண்டாவது கும்பாபிஷேகம் 1943 — 45 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நடந்ததாக அறியமுடிகின்றது. இதன்மேல் கட்டிடங்கள் பழுதடைந்து திருப்பணி வேலைகள் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. சிறிது காலம் மண்டபங்கள் யாவும் சீரற்ற நிலையிலேயே காணப்பட்டது. இதனைக்கண்ணுற்ற கல்விமான்கள், சைவ மக்கள் திருப்பணிகளை நிறைவு செய்வதற்கு முன் வந்தார்கள். 1968ல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணிவேலைகள் ஆரம்பமாயின. ஆலயத்துடன் நெருங்கிய தொடர்புடைய பலர் பெருநிதியங்களை வழங்கினார்கள். இதனால் திருப்பணி வேலைகள் விரைவாக நடைபெற்றன. முக்கியமான கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 15-9-71ல் சிறப்பான முறையில் மூன்றாவது மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் ஒன்பது குருமார் பங்கு கொண்டு பஞ்சகுண்டம் அமைத்துக், கும்பாபிஷேகத்தை மிக உன்னதமாக நடத்தினார்கள்.

இதன்மேல் 19 - 4 - 1973ல் முதலாவது கொடியேற்றம் நடாத்தப்பட்டது. இதன் பின்னரும் தொடர்ச்சியாகத் திருப்பணிகள் பல நடைபெற்றுவந்தன, அடியார்கள் பொது உபயங்களாகவும் தனிப்பட்ட உபயங்களாகவும் நிதியம் வழங்கிப், பல கட்டிடங்களை நிறைவு செய்தார்கள். அடியார்களின் நன்கொடைகளைக் கொண்டு தொண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞூறும் ஆண்டு பிற்பகுதியில் திருப்பணிவேலைகளின் பெரும்பகுதி பூர்த்தியாகியுள்ளன. ஆலயத்தின் வடக்கு வீதியிலே சென்ற நாற்பத்தைந்து ஆண்டு காலமாகச், சமயத்துறைக்கும் இசைத்துறைக்கும் அருஞ்சேவை புரிந்து வரும் பாலர்ஞானோதய சபையின் ஆரம்பகால மாணவர் பலர் இக்கைங்கரியங்களுக்கு உதவியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும் பல அடியார்கள் இன்றும் ஆலயத்துக்குத் தேவையான உபகரணங்களை வாங்கி உபயங்களாகக் கொடுத்து வருகின்றார்கள்.

3 - 6 - 1987ல் (புதிதாக உருவாக்கப்பட்ட) பஞ்சமுகவிநாயகருக்குப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாலயத்தில் பஞ்சமுகவிநாயகரைத் தவிர ஒருமுகவிநாயகர் ஒன்றும் மூலமூர்த்தி, காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட இலிங்கம், மகாவிஷ்ணு, ஸ்தம்பப்பிள்ளையார், மூஷிகம், பலிபீடம், நாகதம்பிரான், வைரவர். தாமிரத்திலான சண்டேசுரர், கருங்கல்லினாலான சண்டேசுரர் முதலாய மூர்த்திகள் தற்பொழுது இருக்கின்றன. நான்கு நாயன்மாரது சிலைகளும் விரைவில் ஸ்தாபிதம் செய்யப்படவுள்ளன. அத்துடன் தனிக்குதிரை, இரட்டைக்குதிரை எலி, இடபம், முதலாம் வாகனங்களும் இரண்டுசகடைகளும் அடியார்களின் உபயங்களாக வழங்கப்பட்டுள்ளன. இவையாவும் தற்பொழுது பாவனையில் உள்ளன.

வருடாந்த உற்சவம் சித்திரைச் சதயநட்சத்திரத்திலன்று தீர்த்தம் வரக்கூடியதாக இடம்பெறும். ஐந்தாம் நாள் உற்சவம் தொடங்கிபக்தமுக்தி பாவனோற்சவம், வசந்தோற்சவம், தைலாப்பியங்கோற்சவம், கிருஷ்ணகந்தகலபனம். வேட்டைத்திருவிழா முதலாய நிகழ்வுகள் இடம் பெறும். மாதந்தோறும் பூர்வபட்ச சதுர்த்தி, ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, மார்கழித்திருவாதிரை, விநாயகசஷ்டி, தைப்பொங்கல், தைப்பூசம் நான்கு நாயன்மாரது குருபூசைகள் ஆகியவை சிறந்த முறையில் கொண்டாடப்படும். ஆவணிமாதத்தில் பூசநட்சத்திரத்திலன்று மணவாளக் கோல உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

காசிவிநாயக அடியார்கள் வேண்டியதைக் கொடுப்பவர்; விக்கினங்களைத் தீர்ப்பவர். தெல்லிவாழ் சைவமக்களின் குல தெய்வம் கருணைவடிவான அப்பெருமானை நாமெல்லாம் வழிபாடு செய்து நல்லருள் பெறுவோமாக.

விநாயக அடியான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசுசுவாமிகள்

## திருமறைக்காட்டில் அருளிய

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண்ணிநேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணினாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே 1

ஈண்டு செஞ்சடை யாகத்துள்ஈசரோ
மூண்டகார் முதலின் முறிக்கண்டரோ
ஆண்டு கொண்ட நீயருள் செய்திடும்
நீண்டமாக் கதவின் வலிநீக்கமே. 2

அட்ட மூர்த்திய தாகிய வப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்டக வண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பாமரோ
சட்டவிக் கதவந் திறப் பிம்மினே. 3

அரியநான் மறையோதிய நாவரோ
பெரியவான்புரஞ் சுட்ட வண்டரோ
விரிகொள் கோவண வாடை விருந்தரோ
பெரியவான் கதவம் பிரிவிக்கவே. 4

மலையினீடிருக்கும் மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ்சுங் கழலெத்தரோ
விலையின் மாமணி வண்ண வுருவரோ
தொலைவிலாக் கதவந் துணைநீக்குமே. 5

பூக்குந் தாழை புறணியருகெலாம்
ஆக்குந்தன் பொழில்சூழ் மறைக்காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்தவெண் பொடிப் பூசும் விகிர்தரோ
அந்தமில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடியார் வந்திறைஞ்சிட
இந்தமாக் கதவம் பிணிநீக்குமே. 7

ஆறு சூடு மணி மறைக்காடரோ
கூறுமா துமைக் கீந்த குழகரோ
ஏறதேறிய வெம்பெரு மானிந்த
மாறிலாக் கதவம் வலிநீக்குமே. 8

கண்ண வெண் பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணியேறு நந்தேறும் பரமரோ
அண்ணலாதி யணி மறைக் காடரோ
திண்ணமாக் கதவந் திறப்பிம்மினே. 9

விண்ணு ளார் விரும்பி யெதிர்கொள்ளவே
மண்ணுளார் வணங்கும் மறைக்காடரோ
கண்ணினு லுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

அரக்கனை விரலா லடர்த்திட்டநீ
இரக்க மொன்றில் ரெம்பெருமானிரோ
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக் கவிக் கதவந் திறப்பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

---

## உமாபதி சிவாச்சாரியார் அருளிய

# கொடிக்கவி

திருச்சிற்றம்பலம்

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளடராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்படிக் கொடிகட்டினனே. 1

பொருளாம் பொருளேது போதாது கண்ணே
திருளாம் வெளியே திரவே(து) ... அருளாளா
நீபுரவா' வையமெலாநீஅறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை ... நோக்கிப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கு மருள்நல்கக் கொடி. 3

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைபெருவெ ழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக்கொடி. 4

திருச்சிற்றம்பலம்

---

மணிவாசகர் அருளிய

# திருப்பொற் சுண்ணம்

(ஆநந்த மனோலயம்)

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமப்பூ மாலை தூக்கி
  முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
  நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
  கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
  யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 1

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
  பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
  வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
  குனிமின் றொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந் தெம்மையாடச்
  செம்பொன் செய் சுண்ண மிடித்துநாமே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற் சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன் பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற் சுண்ணம் மிடித்துநாமே. 3

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 4

அறு கெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற் செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காணவுல கங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ண மிடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழா மெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்பத்
நாமு மவர்தம்மை யார்ப்ப வார்ப்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்ன கோவுக்
காடப் பொற் சுண்ண மிடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோறெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
யாடப் பொற்சுண்ண மிடித்துநாமே. 8

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
யாடப்பொற் சுண்ண மிடித்து நாமே. 9

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செய்கையற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொரு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
வாடப் பொற்சுண்ண மிடித்துநாமே. 10

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெருமானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
யாடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை யையர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர் தம்பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையரா வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே: 12

மின்னிடைச் செந்துவர் வான்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே: 13

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ் தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப வராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே: 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடக் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ண மிடித்துநாமே: 15

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மானகஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 17

அயன்றலை கொண்டு செண்டாடல்பாடி
யருக்க னெயிறு பறித்தல் பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
யியைந்தன முப்புர மெய்தல்பாடி
யேழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடி நின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம் பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே. 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய் முற்று மாயினார்க்கு
பந்தமுமாய் வீடு மாயினார்க்குக்
காதியு மந்தமு மாயினார்க்குக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# வீணாக்கடவைக் காசிவிநாயகர் திருவூஞ்சல்

## காப்பு

நாரணனு நான்முகனு நாடிக் காண
நாயகனும் நாயகியு ஞால முய்ய
ஆரணவா கமமூல மணுவாய்க் கூடி
அரியதிரு விளையாடல் புரியு நாளில்
வாரணமா முகமுமைந்து கரமுங் கொண்டே
வந்தருளுந் தொந்திவயிற் றெந்தா யுன்மேல்
ஏரணவு மூஞ்சலிசை தமிழாற் பாட
இருசரண வாணமல ரிணைகாப் பாமே.

## நூல்

சீர்பூத்த மாமாயை யருளிற் பூத்த
சிவம்பூத்த நாதவிந்து தூண நாட்டி
ஏர்பூத்த வக்கரங்கள் விட்டம் பூட்டி
இசைபூத்த கலையாதி வடங்கள் மாட்டிப்
பார்பூத்த வோங்கார பீடங் கூட்டிப்
பயன்பூக்க வாக்கியபொன் னூஞ்சன் மீதே
கார்பூத்த தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடி ரூஞ்சல்.

ஒளியோங்கு மிருசுடரும் கவிகை தாங்க
உரமோங்கு மனிலனெறிற் கவரி வாங்க
நளியோங்கு மடல்வருணன் பனிநீர் தூவ
நயமோங்கு தருமனுய ருடைவாள் காவத்
தெளியோங்கு தவமுனிவ ராசி பேசச்
சீரோங்கு மமரர்தரு மலர்கள் வீசக்
களியோங்கு தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடி ரூஞ்சல்.

பண்ணமரும் சித்திரயாழ் முனிவன் மீட்டப்
பாலமரும் மாலவனார் முழவு கூட்ட
விண்ணமரு மரம்பையர்கள் நடன மாட
விரையமரு மலரவனார் தாளம் போட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணமரும் விஞ்சையர்கள் கானம் பாட
இருளமரும் மலத்தொடர்ச்சி யிரிந்தே யோடக்
கண்ணமருந் தெல்லிநகர் வீறுக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

ஆவணியு மைந்திளநீர் பனிநீர் கூட்டி
அருளணியு மந்திரநீர் நறுநீ ராட்டித்
தாவணியுந் துகிலணிந்து கலன்கள் மாட்டித்
தூபமணி தீபநிரை தோன்றக் காட்டிப்
பாவணிசொன் மாலைமலர் மாலை சூட்டிப்
பழமையணி யடியவர்கள் பரவி யேத்தக்
காவணியுந் தெல்லிநகர் வீறுக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

நீர்மலிந்த செய்யசடை நிமல னோர்பால்
நிறைமலிந்த சிமயமலை யமலை யோர்பால்
கூர்மலிந்த முத்தலைவேற் குமர னோர்பால்
குணமலிந்த அறுமுகத்துக் குழக னோர்பால்
தார்மலிந்த நெடுமாலும் அயனு மோர்பால்
தமிழ்மலிந்த மறையோது மடிய ரோர்பால்
கார்மலிந்த பொழிற்றெல்லி வீறுக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

வந்தவினை விக்கினங்கள் தீர்ப்பாய் என்றும்
மந்திரவோங் காரமுதல் ஆனாய் என்றும்
சந்திரசா பந்தவிர்த்த தலைவா என்றும்
தக்கனுக்கு மிக்கவரம் தந்தாய் என்றும்
சிந்துரமா முகனைவதை செய்தாய் என்றும்
தேவாதி தேவவென்றும் சேவித் தேத்தக்
கந்தமலி பொழிற்றெல்லி வீறுக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

ஆனைமுகன் வலிமைகெடுத் தருளல் பாடி
அவ்வைதமிழ்க் கருள்புரிந்த அன்பு பாடி
ஞானமுனி குண்டிகைநீர் கவிழ்த்தல் பாடி
நம்பிக்குக் கலையளித்த நயமும் பாடி
மானமிகு சனகனையாட் செய்தல் பாடி
வல்லபையாள் தோள்புணரும் வளமும் பாடிக்
கானமலி தெல்லிநகர் அடியர் போற்றக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதகுஞ் சரமுகவ பால நேத்திர
ஆரம்ப தேவகண நாத ஞான
சிற்பரமுப் புரதகனர் பரவு மோன
சித்திபுத்தி யிருபாக தேவ தேவ
மற்புயலம் போதரமா தங்க ரூப
வக்கிர தந்தமா யூரவங் குசபாச
கற்புமலி தெல்லிநகர் வீறுைக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

மங்கலவா ரணமுகத்தீ ராடீ ரூஞ்சல்
மந்திரவா ரணமுகத்தீ ராடீ ரூஞ்சல்
தங்கவரைப் புத்தகத்தீ ராடீ ரூஞ்சல்
சார்ந்தவரைப் புத்தகத்தீ ராடீ ரூஞ்சல்
அங்கணருங் குளத்துடையீ ராடீ ரூஞ்சல்
ஆசையருங் குளத்துடையீ ராடீ ரூஞ்சல்
கங்கணஞ்சூழ் பொழிற்றெல்லி வீறுைக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

பூவாழி பொன்னின்மழை பொலிந்து வாழி
பூசுரரும் ஆனிரையும் பொலிந்து வாழி
தேவாழி ஐந்தெழுத்தும் நீறும் வாழி
செந்தமிழ்மந் திரம்வாழி தேவி வாழி
பாவாரும் மயில்வாழி அடியார் வாழி
பரவுதமிழ் ஊஞ்சலிசை பத்தும் வாழி
காவாரும் தெல்லிநகர் வீறுைக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே வாழி வாழி.

திருச்சிற்றம்பலம்.

திருமதி க. சிவானந்தவல்லி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# கொடியேற்றத்தின் போது -- ஸ்தம்பத்தடியில்

# ஓதவேண்டிய திருமுறைகள்

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

கணபதி தாளம்: பண்; தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ.

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

மூஷிக தாளம் பண்; காந்தாரபஞ்சமம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

# நவசந்திகளில் ஓதவேண்டிய தேவாரப் பண்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

பிரம சந்தி (மத்தி) பண்; மேகராகக் குறிஞ்சி

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோல மாய
பாறு சேர்தலைக் கையர் பாராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே.

## திருஞானசம்பந்த சுவாமி அருளியது

வருணசந்தி (மேற்கு) பண்; சீகாமரம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

## திருஞாசம்பந்த சுவாமிகள் அருளியது

வாயுசந்தி (வடமேற்கு) பண்; தக்கேசி

பூவார்மலர் கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவார் புரங்கள் எரித்த அன்றுமூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையும் சாரல் அண்ணாமலையாரே.

## திருஞானசம்பந்த சுவாமி அருளியது

குபேரசந்தி (வடக்கு) பண் ; தக்கராகம்

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப்
பூத கணம் புடைசூழ
கொடியுடை யூர் திரிந்து ஐயம்
கொண்டு பல பல கூறி
வடிவுடை வாள்நெடுங் கண்உமை பாகம்
ஆயவன் வாழ்வொளி புத்தூரில்
கடிகமழ் மாமல ரிட்டுக் —
கறைமிடற்றானடி காண்போம்.

## திருநாவுக்கரசு சுவாமி அருளியது

ஈசானசந்தி (வட கிழக்கு) பண் ; சாலாபாணி

தலையே நீ வணங்காய் — தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

இந்திரசந்தி (கிழக்கு) பண் ; காந்தாரம்

மந்திர மாவதுநீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவதுநீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

அக்கினிசந்தி (தென் கிழக்கு) பண் ; கொல்லி

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

யமசந்தி (தெற்கு) பண் ; கௌசிகம்

காதலாகி கசிந்துகண் ணீர்மல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

*திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது*

நிருதிசந்தி (தென்மேற்கு) பண்;நட்டபாடை

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

திருச்சிற்றம்பலம்

★

௨

# விநாயக கவசம்

ஆதியில் இக் கவசத்தைக் காசிபமுனிவர் முற்கல முனிவருக்கு அருளிச்செய்ய, அவர் மாண்டவியமுனிவருக்கு அநுக்கிரகிக்க, அவர் மாரீசிமுனிவருக்கு உபதேசித்தருள, அவர் பல முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தனரென்றறிக.

நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்து கொண்டு, ஒன்றுபட்ட மனத்துடனே விநாயகரைத் தியானித்து, இதைச் செபிக்கவேண்டும்.

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேகம்
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவம் தம்மைத்
தளர்விலமகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க. 1

கவின்வளரும் அதரங்கச முகர்காக்க
தால்அங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிஜைசுதர் காக்கநனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க அள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறு திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க. 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கஅகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க. 3

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
சாக்கசக னத்தை அல்லல்
உக்ககண பன்காக்க ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க. 4

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கஇரு
பதம் ஏக தந்தர் காக்க
வாழ்கரம்க்ஷிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் அர்த்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க. 5

அக்கினியிற் சித்தீசர் காக்க
புத்திரர்தென் ஆசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயக் குருவும், அன்றைது தீட்சா குருவும்



காசி விநாயகரின் கடாட்சம்
பெற்ற அமரர் சிவஸ்ரீ
மு. சிவகடாக்ஷக் குருக்கள்



வேதாகம ஞானபாஸ்கரன்
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்
இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கதனிற் காக்க, வா யுவிற்கசகன்
னர்காக்க திகழ் உதீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க. 6

ஏகதந்தர் பகன்முழுதும் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க. 7

மதி, ஞானம் தவம் தானம் மானம்ஒளி
புகழ்குணம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம் கிருகம்
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னை
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. 8

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்
ஓதிடின் நும்பால் இடையூ றொன்றும்
ஒன்றுறு முனிவரர்கள் அறிமின்கள்
யார்ஒருவர் ஓதி னாலும்
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும். 9

விநாயக கவசம் முற்றிற்று.

பக்தியுடனே இந்தக் கவசத்தைப் பாராயணஞ் செய்பவர் களுக்குப் பிணியும், வறுமையும், பேய் பூதங்களாலுண்டாகின்ற பல துன்பங்களும், கவலைகளும், பாவமுதலியவைகளும் நீங்கும். அன்றியும், பெருஞ் செல்வமும், தீர்க்காயுளும், களத்திர புத்திர மித்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதிகளும் உண்டாகும். அன்றியும், யாத்திரையிலே இதைச் செபித்தால் சகல விக்கினமும் போய்ப் பயன்களெல்லாம் கைகூடும். யுத்தத்திலே இதைச் சொன்னால் சயமுண்டாகும். இருபத்தொருநாள் நாளொன்றுக்கு ஏழுமுறை தோத்திரஞ் செய்தால், மாரண நீங்குவதன்றி உச்சாடனம் ஆகருஷணம், ஸ்தம்பன முதலியவைகள் பயனுறும். இருபத்தொருநாள் நித்தியம் இருபத்தொருதரஞ் செபித்தால் சிறையிருப்பு விடுதலாவதுமன்றி, அரசர்களுடைய நிஷ்டூரமு நீங்கும். அரசனைக் காணப்போகும் போது பத்தியினால் மூன்றுதரம் இதை ஓதினால் அவன் வசப்படுவான். இதைப் படித்தாலும் ஒருவர் சொல்லக்கேட்டாலும் பூசித்தாலும், எப்படிப்பட்ட துன்பமும் நீங்கும்.

---

# நவராத்திரி பற்றிய சிந்தனைகள்

கன்னித் திங்கள் வருகுதி ஐயா,
கருத் துடன் நவராத் திரியாம்
கன்னிகை அம்மன் பூசைகள் செய்யக்
காசு பணம் வேணும்
பொன்னைப் போலே நிறமுள கனியும்
பூமடை காய் மடையாம்
புனிதார் அப்பம் இளநீர் புஷ்பம்
புனுகு சவ்வா துடனே
வன்னப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகள்
அரிசிகள் கொண்டு வாங் கிடுவீர்
அன்னப் பரிமள குங்கும மிர்குமத
அழகிய மெய்யாளே!
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத்து
அபிராமித் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில் வழிபாட்டு முறைகள்

1. **கோவிலுக்கு எவ்வாறு போதல் வேண்டும்?**

கோவிலுக்குப் போகும் போது ஸ்நானஞ் செய்து (குளித்து) தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துக் கொண்டு பூக்கள் (புட்ப விதிக்கமைய) பழங்கள் அர்ச்சனைப் பொருட்கள் இவற்றில் ஏதாவது ஒன்றைக் கொண்டு செல்லல் வேண்டும்.

2. **கோவிலை அண்மித்ததும் என்ன செய்ய வேண்டும்?**

நீரினாலே கை கால்களைச், சுத்தி செய்து கொண்டு தூல லிங்கம் எனப்படும் கோபுரத்தைத் தரிசனஞ் செய்து கொண்டு உள்ளே செல்ல வேண்டும்.

3. **கோவிலின் உள்ளே சென்றதும் முதலில் யாரை வணங்க வேண்டும்?**

விநாயகப் பெருமானை வணங்க வேண்டும்.

4. **வீழ்ந்து வணங்குவதாயின் எங்கே வணங்க வேண்டும்?**

பலிபீடத்துக்கு இப்பால் கிழக்கே, அல்லது வடக்கே தலை வைத்து வணங்க வேண்டும்.

5. **ஆண்கள் எவ்வாறு வீழ்ந்து வணங்க வேண்டும்?**

எட்டு உறுப்புகளும் நிலத்திலே பொருந்தும்படி வணங்க வேண்டும். எட்டுறுப்புக்களாவன; தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு.

6. **பெண்கள் எவ்வாறு வீழ்ந்து வணங்க வேண்டும்?**

ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்க வேண்டும். ஐந்து உறுப்புக்களாவன: தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு.

7. **வீதியை வலம் வந்து வணங்குவதாயின் எத்தனை தரம் வலம் வருதல் வேண்டும்?**

குறைந்தது மூன்று தரம் வலம் வருதல் வேண்டும். ஒரு தரம் இரு தரம் வலம் வருதல் தவறாகும்.

8. **எக்காலங்களிலே வீதியை வலம் வருதல் வீழ்ந்து வணங்குதல் ஆதியன செய்யக் கூடாது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிக்கு அபிஷேகம் நைவேதனம் ஆகியன நடக்கும்போது வீதியை வலம் வருதல், வீழ்ந்து வணங்குதல் ஆதியன செய்யக் கூடாது.

9. இறுதியாக யாரை வணங்க வேண்டும்?
சண்டேசுரநாயனாரை வணங்கித் தரிசன பலத்தைத் தருமாறு பிரார்த்தித்தல் வேண்டும்.

10. கோவிலில் தவிர்க்க வேண்டியவை எவை?
வீண் வார்த்தை பேசுதல், சத்தம் இடுதல், சண்டையிடுதல் சுவாமிக்கும் பலி பீடத்துக்கும் குறுக்கே போதல், ஆசாரம் இல்லாது போதல், கால் கழுவாது போதல் முதலாயின முக்கியமாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

# கும்பாபிஷேகம் - மகோற்சவம்
## ஒரு நோக்கு

தெல்லிமாநகர் - கருணைமிகு காசி விநாயகப் பெருமானின் மூன்றுவது கும்பாபிஷேகம் மிகவும் உன்னதமான முறையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இருபத்தொரு ஆண்டுகள் மணவாளக் கோல உற்சவம் நடைபெற்று வருகின்றது. கும்பாபிஷேகம் நடைபெற்ற திகதியும் ஷெ உற்சவங்கள் நடைபெற்ற திகதிகளும் தரப்பட்டுள்ளன. அத்துடன் விநாயகப் பெருமானின் முதற் கொடியேற்றம் நடைபெற்ற திகதியும், தொடர்ந்து பத்தொன்பது ஆண்டுகள் கொடியேற்றம் நடந்த திகதிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற்ற திகதியும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மணவாளக் கோல உற்சவ திகதிகளும். |
|---|---|
| 1 | 15 - 9 - 71 |
| 2 | 4 - 9 - 72 |
| 3 | 26 - 8 - 73 |
| 4 | 12 - 9 - 74 |
| 5 | 3 - 9 - 75 |
| 6 | 23 - 8 - 76 |
| 7 | 9 - 9 - 77 |
| 8 | 30 - 8 - 78 |
| 9 | 20 - 8 - 79 |
| 10 | 6 - 9 - 80 |
| 11 | 27 - 8 - 81 |
| 12 | 14 - 9 - 82 |
| 13 | 4 - 9 - 83 |
| 14 | 24 - 8 - 84 |
| 15 | 11 - 9 - 85 |
| 16 | 1 - 9 - 86 |
| 17 | 22 - 8 - 89 |
| 18 | 7 - 9 - 88 |
| 19 | 28 - 8 - 89 |
| 20 | 15 - 9 - 90 |
| 21 | 5 - 9 - 91 |

| | முதற் கொடியேற்றம் நடைபெற்ற திகதியும் தொடர்ந்து ஆண்டுதோறும் இடம்பெற்ற மகோற்சவ திகதிகளும். |
|---|---|
| 1 | 19 - 4 - 73 |
| 2 | 9 - 4 - 74 |
| 3 | 26 - 4 - 75 |
| 4 | 15 - 4 - 76 |
| 5 | 2 - 5 - 77 |
| 6 | 23 - 4 - 78 |
| 7 | 13 - 4 - 79 |
| 8 | 20 - 4 - 80 |
| 9 | 20 - 4 - 81 |
| 10 | 16 - 4 - 82 |
| 11 | 28 - 4 - 83 |
| 12 | 27 - 4 - 84 |
| 13 | 4 - 5 - 85 |
| 14 | 24 - 4 - 86 |
| 15 | 21 - 4 - 87 |
| 16 | 1 - 5 - 88 |
| 17 | 21 - 4 - 89 |
| 18 | 12 - 4 - 90 |
| 19 | 20 - 4 - 91 |

பஞ்சமுக விநாயகர் கும்பாபிஷேகம் 3 - 6 - 87

,, ,, விமானக் ,, 2 - 4 - 90

卐 卐 卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரணவத்தின் தத்துவம்

ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓம்எனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே — திருமூலர்

ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு-
—கந்தரலங்காரம்

இறைவனின் ஐம்முகங்களில் வடபால் வதனத்திருந்து 'அ' என்ற அசையும், மேற்கில் " உ " என்பதும், தென்பால் " ம் " என்பதும், கிழக்கில் விந்து என்ற குற்றும் நடுவன் நாதமும் எழுந்தன. இந்த ஐந்து வகை வடிவம், ஓம் என்ற ஒன்று.

" நமசிவாய " எனும் ஐந்தெழுத்தும் இவ்வண்ணமே. ஓங்கார மந்திரம் ஒன்றே எல்லாப் பேற்றையும் ஈவது. இவ்வாறு சிவ புராணத்தில் விக்கினேஸ்வர சங்கிதையிலும், ஓம் என்பது பரம இரகசியம். அது பிரணவப் பொருளை விளக்கிச் சிவஞானம் தெளிய வைக்கும் - அல்லாமல் யாவற்றையும் அழித்து விடும் எனச் சிவபுராணம் கைலாச சங்கிதையிலும் அவற்றை ஆய்ந் தறிந் துணர்ந்த அறிஞர்கள் கூறியதாக அறியக்கிடக்கின்றது.

ஓங்காரத்தில் உள்ள அந்த ஒப்பற்ற ஒருவனை உள்ளத்துணர்ந்த " ஓம் " எனும் மந்திரத்தை உச்சரித்தல் முதற்படி

ஆழ்ந்த உட்பொருள் ஞானபதம் ஆகும். 'ஓம்' திருமந்திரம்;

ஊமை எழுத்துடன் பேசும் எழுத்துறில்
ஆமை அகத்திடில் ஐந்தும் அடங்கிடும்
ஓமய முற்றது உள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே.

என விளக்கப்படுகின்றது.

'ம்' கேட்கப்படாத ஒலி, ஒலி கேட்கப்படும். ' அ ' ' உ ' என்ற இரண்டினுள் அமைய ஐம்புலனும் ஆன்மாவுக்குள் ஒடுங்கி ஓம் ஆக உள்ளொளி பெற்றிடும் என்றவாறு.

ஆதியானது அந்தச் சொல் என்பர். ஏகாட்சரம் அதுவே. யஜுர் வேத சங்கிதை ஸ்ரீருத்திரத்தில் வரும் மந்திரத்தை நோக் குவாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணாநாம் த்வா கணபதிம் ஹவாமஹே
கவிம் கவீநாம் உபவஸ்ர வஸ்த மம்

இவ்வாறு வரும் கருத்தைப் பொருத்தி

ஓம் சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம்
சதுர்ப்புஜம் பிரசன்ன வதனம் (தியாயேத்)
ஓம் சர்வ விக்னோப சாந்தயே

அருள் மந்த்ரம் அநவரதம் ஆற்றி
நாம் கர்வ மில்லாது நன்கமைந் துளமெய்தி
நமச்சிவா யத்தைவி நாயக
மாம் வண்ணம் அறிந்துணர்ந் துச்சரித் துபசரித்தால்
அமைந்திடும் ஐங்கரன் அணியே.

பழமபதிப் பன்மணிமாலை பகர்கின்றது

ஓம் கம் கணபதி என்பது தாரக மந்திரம், மூல மந்திரம் போன்று அடியார்கள் அடிக்கடி அர்ச்சிப்பார்களாக.

தூ மறைக் கெலாம் ஆதியும்
அந்தமும் சொல்லும்
ஓ மெனப்படும் ஓ ரெழுத் துண்மையை
யுணரான்
மாமலர்ப் பெருங் கடவுளும் மயங்கி
னன் என்றால்
நாமி னிச்சில அறிந்தனம் என்பது நகையே.

" கந்தபுராணம் "

[சைவ சித்தாந்த இலக்கிய இரசிகர், சிவதொண்டர் பாலர் ஞானோதய சபையின் உயிரோட்டமாக விளங்குபவருமாகிய ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஷெ சபையின் போஷகராக நாற்பத்தைந்து ஆண்டு காலம் நம் சபையிலிருந்து நன்னெறி புகட்டி வருபவர் சைவசித்தாந்தச் செம்மல், இறை ஒளி, இந்துசாதன ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் அவர்கள் எழுதி வழங்கிய பிரணவம் பற்றிய தத்துவ உரை.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம்

1. காசிவிநாயகப் பெருமான் மகாதனை நரசிங்க வயிரவர் ஆலயத்துக்கு விஜய தசமியிலன்று எழுந்தருளி 'வன்னிவாளை வெட்டும் நிகழ்ச்சி ஏறக்குறைய ஐம்பதுஆண்டு காலமாக நிகழ்ந்து வருகிறது.

2. தேவஸ்தானத்தில் மகோற்சவம் இடம்பெறும். காலங்களில் நவசக்திகளுக்குரிய பண்ணமைந்த பாக்களை ஓதுபவர் சைவச்சீலர் திரு. சு. ஏழுர்நாயகம் அவர்கள்.

## ஞாேனாதயம் வளர்க்கும் ஞானச் செம்மல்கள் பற்றிய சில குறிப்புக்கள்:

1. 1946ம் ஆண்டு சபை உதயமானபோது மாணவர்களாகச் சேர்க்கப்பட்டு ஐந்து ஆண்டு காலம் சமயம் கற்று வெளியேறிய முக்கியஸ்தர்கள் நால்வர்.

திரு. த. பூ. முருகையா அவர்கள்
,, சு. சிவவாகீசர் ,,
,, ஆ. ஞானசேகரம் ,,
,, இ. நித்தியானந்தம் ,,

2. மேற்படி சபையின் பழைய மாணவர் சங்கம் திரு. த. பூ. முருகையா ஆசிரியர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயற்படுகின்றது.

3. சபையின் செயற்பாடுகளை நெறிப்படுத்துபவர்கள்:

செயலாளர் ந. சிவபாலகணேசன் அவர்கள்
சிவஸ்ரீ வா. அகிலேசக்குருக்கள் அவர்கள்
திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை ,,
திருமதி கலாதேவி பொன்னம்பலம் ,,
திரு. நா. செல்வநாயகம் (ப. மா. ச. பொருளாளர்)
திரு. சு. ஏழுர்நாயகம் அவர்கள்
செல்வன் வை. வேனிலான் ,,
,, இ. துளசிதரன் ,,
,, இ. இராதாகிருஷ்ணா ,,
செல்வி சிவசோதி சின்னப்பு ,,
,, பாலசரஸ்வதி தில்லைநாயகம் ,,

ப. சுரேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவந்த பதின்மூன்று நூல்கள்

1. கூட்டுப் பிரார்த்தனைத் தோத்திரத் திரட்டு 1963
2. பிரமஸ்ரீ மு. சிவகடாஷக் குருக்கள் நினைவு மலர் 1970
3. பாலர் ஞானோதய சபை வெள்ளிவிழா மலர் 1972
4. காசி விநாயகர் - வரலாறு, பதிகம் 1972
5. கூட்டுப்பிரார்த்தனைத் தோத்திரத் திரட்டு 1973
6. திருவாதவூரடிகள் வரலாற்றுச் சுருக்கம் 1985
7. பெரிய புராண வசனச் சுருக்கம் 1985
8. திருத்தொண்டர் புராணம் வினுவிடை 1986
9. பத்துக் கட்டுரைகள் 1987
10. விநாயக மகத்துவம் 1987
11. சைவ சமயப் பொது அறிவு 1989
12. திருவாதவூரடிகள் வினுவிடை வரலாறு 1990
13. சந்தானகுரவர் சுருக்கம் வரலாறு 1991

## இனி வெளிவர உள்ளன

14. நீறில்லா நெற்றி பாழ்
15. திருவாசமென்னுந்தேன்
16. தலையே நீ வணங்காய்
17. தித்தலும் கை தொழுவேன்
18. கணபதி கடாட்சம்

சைவப்பிரகாச அச்சகம் 450, K. K. S வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org